**பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் இராமையன்பட்டி கிராம ஊராட்சி**
**ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**
**முன்னிலை: திரு.கு.டேவிட்**

ந.க.எண்: அ.01/2023-24

நாள்: 01.03.2024

பொருள்: குடியிருப்பு மனைப்பிரிவு - திருநெல்வேலி மாவட்டம் இராமையன்பட்டி வருவாய் கிராமம் சர்வே எண் 708/1, 8800ச.மீ 2.18 ஏக்கர் குடியிருப்பு மனைப்பிரிவு **DTCP** தொழில் நுட்ப ஒப்புதல் மற்றும் வரைபடங்களுக்கு ம.வ/தி.உ.திகு எண். **LP/TVL.DTCP.NO-SWP/ 21/2023, PP/TL.P/TLPA NO:SWP/35/2023** என எண்ணிட்டு வரப்பெற்றது. இறுதி ஒப்புதல் வழங்கி ஆணையிடல் சார்பு.

பார்வை:

1. அரசாணை நிலை எண்.71, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 16.8.2023 .
2. அரசாணை நிலை எண். 255 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள் 18.08.1997.
3. திருநெல்வேலி மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்கள் செயல்முறை ஆணைகள் ந.க.எண். **B8YWHGCB/2022/TCP**
   **PP/TL.P/TLPA NO:SWP/35/2023**, நாள்: 02.06.2023
   தீர்மானம் எண்: 54 நாள் 19.02.2024

ஆணை:

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம் இராமையன்பட்டி கிராம ஊராட்சி இராமையன்பட்டி வருவாய் கிராமத்தில் சர்வே எண். 708/1, 8800ச.மீ 2.18ஏக்கர் பரப்பளவில் அமையவுள்ள குடியிருப்பு மனைபிரிவுக்கு இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் திருநெல்வேலி மாவட்ட நகர ஊரமைப்பு உள்ளூர் திட்ட குழுமம் அவர்களால் ம.வ.தி.உ.தி.கு.எண். **PP/TL.P/TLPA NO:SWP/35/2023**, என எண்ணிட்டு தொழில் நுட்ப ஒப்புதல் மற்றும் தி.அ/ம.வ./தி.உ.தி.கு.எண். **LP/TVL.DTCP.NO-SWP/ 21/2023** என எண்ணிட்டு திட்ட அனுமதியும் வரப்பெற்றுள்ளது. இம்மனைப்பிரிவு 708/1, 8800ச.மீ 2.18 ஏக்கர் அமைந்துள்ளது. இதில் மனைகள் 41 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இம்மனைப்பிரிவில் 2877.54சதுர மீட்டர் பரப்பளவில் சாலைகள் உள்ளாட்சிக்கு பொது உபயோக ஒதுக்கீடு 31.56 ச.மீ மின்வாரியத்திற்கு 33.0 ச.மீ சேர்த்து மொத்தம் 2942.00 ச.மீ பரப்பளவு உள்ள நிலம் ஊராட்சிக்கு தான பத்திர பதிவு எண். 1336/2023 நாள் 10.04.2023 மூலம் தானமாக வழங்கப்பட்டுள்ளது. பார்வை-3ல் திருநெல்வேலி மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எ.எண். **PP/TL.P/TLPA NO:SWP/35/2023** நாள் 02.06.2023 கண்ட செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மனைப் பிரிவிற்கு இராமையன்பட்டி கிராம ஊராட்சிக்கு **LAYOUT** கட்டணம் 8800 சதுர மீட்டருக்கு (2.18 ஏக்கர்) மதிப்பீட்டு கட்டணமாக 2.18 ஏக்கர் X 1000 = 2018 மற்றும் மனை ஒன்றிற்கு ரூபாய் ஆயிரம் வீதம் 41 X 1000 =41000 (ரூபாய் நாற்பத்தொன்றாயிரம் மட்டும்) மற்றும் ஆய்வுக் கட்டணம் 1000 ரூபாய் ஆயிரம் மட்டும் ஆக மொத்தம் 44180/- ஊராட்சி நிதிக் கணக்கில் 01.03.2024 அன்று மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே பின்வரும் நிபந்தனைகளுடன் இக்குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் திருநெல்வேலி உள்ளூர் திட்ட குழுமம் மற்றும் மாவட்ட நகர் ஊரமைப்பு அவர்களின் கடித ந.க.எண். **SWP** 21/2023, **SWP** 35/2023 நாள் 02.06.2023 குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் நிபந்தனைகள் பின்பற்றப்பட வேண்டும்.
2. மேற்படி கடிதத்துடன் வரப்பெற்ற கோப்பு ந.க.எண். **B8YWHGCB/2022/TCP** நாள் 02.06.2023 குறிப்பிட்ட மனைகள் விற்பனை மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி செயல்பட வேண்டும்.
3. மனைப்பிரிவிற்கு **LAYOUT** கட்டணம் செலுத்தியதில் வித்தியாச தொகை ஏதேனும் செலுத்த வேண்டியது. பின்னர் அறியப்பட்டால் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.
4. அரசாணை எண்.78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை நாள் 04.05.2017ல் குறிப்பிட்டுள்ள மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் விதி எண் 4 மற்றும் 6ல் குறிப்பிட்டுள்ள இனங்கள் பாதிக்கும் வண்ணம் இருப்பின் அந்த மனையின் வரன்முறை எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.
5. நில உரிமம் குறித்து உறுதி செய்யும் பொறுப்பு மனுதாரரை சார்ந்ததாகும்.
6. மனைப்பிரிவின் ஊடே முழுமைத்திட்ட / விரிவு அபிவிருத்தி திட்ட சாலைகள் மற்றும் பூங்கா அமையுமாயின் அம்மனையின் வரன்முறை எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

7. மனைப்பிரிவிற்கு மற்றும் மனைகளுக்கு செல்லும் அணுகுசாலை குறித்தான உரிமம் மனுதாரரால் உறுதி செய்து கொள்ளப்பட வேண்டும்.

8. நீதிமன்ற வழக்கு ஏதும் இருப்பின் மனுதாரரை சார்ந்ததாகும்.

9. மனைப்பிரிவுகள் ஊடே உயர் மின் அழுத்த கம்பி பாதை கோபுர பாதை செல்லுமாயின் அம்மனையின் வரன்முறை எவ்வித முன் அறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

10. மனை/மனைப்பிரிவின் ஊடே போக்கு கால்வாய் அமையுமாயின், அதற்கு இடையூறின்றி பாதுகாக்கப்பட வேண்டும்.

11. இம்மனைப்பிரிவில் குறுக்குச் சாலைகளில் மழைநீர் மற்றும் கழிவு நீர் செல்ல ஏதுவாக சிறு குழாய் பாலங்கள் மனுதாரரால் 30 தினங்களுக்குள் அமைக்கப்பட்டு அதன் விபரம் ஊராட்சி மன்ற தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

12. இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள மெயின்ரோடு மற்றும் குறுக்கு தெருக்களில் மின்கம்பம் மனுதாரரின் சொந்த செலவில் 30 தினங்களுக்குள் அமைக்கப்பட்டு அதன் விபரம் ஊராட்சி மன்ற தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும்.

இணைப்பு

1. திருநெல்வேலி மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் செயல்முறை ஆணை
2. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்-1.

01/03/24

தலைவர்
இராமையன்பட்டி கிராம ஊராட்சி
பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியம்

01/03/24

பெறுநர்

திரு.S. கண்ணன்
கதவு எண்.4/97, எட்டயாபுரம்ரோடு
தூத்துக்குடி.

நகல்

1. இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
சேவியர் காலனி, தெற்குபுறவழிச்சாலை, திருநெல்வேலி - 627005.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) பாளையங்கோட்டை
3. உதவி இயக்குநர், நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம்
4. வட்டாட்சியர், பாளையங்கோட்டை வட்டம், திருநெல்வேலி மாவட்டம்
5. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டல் -4) பாளையங்கோட்டை